பெறுநர் 13-03 2015

தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
பகிர்மானக் கழகம்,
சென்னை – 600 002

ஐயா.

- பொருள் : களப்பிரிவு – சிறப்பு நிலை ஆக்க முகவர் பதவி உயர்வு துறப்பு ரத்து செய்யப் பட்டது – வேலைபளு புதிய பொறுப்புகளுக்கு நேராக தயாரிக்கப் பட்ட பதவி உயர்வு பட்டியலில் பெயர் சேர்த்திட வேண்டுதல்.

பார்வை : 1) தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு அவர்களின் குறிப்பாணை எண். 95745/சி.1 (1) /94-2-(நிர்வாகப் பிரிவு ) நாள் – 5 9 1994.

-- 2) எங்கள் சங்கக் கடித நாள் 1 8 2014.

3) சம்மேளனம், எங்களது சங்கம் மற்றும் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் வாரியத் தலைவரிடம் 6-9 2014 அன்று கொடுக்கப் பட்ட மனு மற்றும் நேரடி முறையீடு.

4)தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு அவர்களின் குறிப்பாணை எண்.073010/526/ஜி.46/ஷி.462/2014-1, நாள் 04-12 2014.

கீழ்காணும் சிலவற்றை தங்களது மேலான பார்வைக்கும் கனிவான நடவடிக்கைக்கும் தெரிவிக்க விரும்புகிறோம்.

2) வாரியப் பணிவிதி 103ன்படி தற்காலிகமாகப் பதவி உயர்வை துறந்தவர்கள் 3 ஆண்டுகள் வரை மீண்டும் பதவி உயர்வு கோரமுடியாது.

-- 3) ஆனால் தொழிற்சங்கங்களின் வேண்டுகோளை ஆழ்ந்து பரிசீலித்து, 1 1 1994ல் ஏற்பட்ட வேலைபளு ஒப்பந்தத்தினால் வழங்கப்பட்ட புதிய கூடுதல் பொறுப்புகளில், பதவி உயர்வு வாய்ப்பினை பெறும் பொருட்டு, தொழிலாளர்களுக்கு ஒரு சிறப்பு நேர்வாக, அவர்களால் ஏற்கனவே துறக்கப்பட்ட பதவி உயர்வினை ரத்து செய்து, பார்வை 1ல் காணப்படும் வாரிய உத்திரவு வழங்கப்பட்டது.

---- 4) அதேபோல் 9 1 2014ல் செய்து கொள்ளப்பட்ட வேலைபளு ஒப்பந்தத்தினால் வழங்கப்பட்ட, கூடுதலான 459 சிறப்புநிலை ஆக்க முகவர் பொறுப்புகளுக்கு நேராக,பதவி உயர்வு வாய்ப்பினை பெறும் பொருட்டு, ஏற்கனவே வழங்கப்பட்ட சிறப்புநிலை ஆக்கமுகவர் பதவி உயர்வினை துறந்தவர்களுக்கு மீண்டும் பதவி உயர்வினை பெறுவதற்கு ஏதுவாக, அவர்களது முந்தய பதவி உயர்வு துறப்பினை, ரத்து செய்திட வேண்டும் என்று 6 9 2014 அன்று, தொழிற்சங்கங்கள் சார்பில் வாரியத் தலைவரிடம் வேண்டுகோள் விடுத்தோம்.

5) எங்களது வேண்டுகோளின் நியாயத்தை உடனே ஏற்றுக் கொண்ட வாரியத் தலைவர், மேல்நடவடிக்கைக்காக தலைமைப்பொறியாளர் / பணியமைப்புக்கு, நாங்கள் கொடுத்த மனுவினை அன்றே அனுப்பி வைத்தார்.

6) எங்களது வேண்டுகோளின் மீது முறைப்படி உத்திரவு வழங்கிட, 3 மாதம் ஆகிவிட்டது. பார்வை 4ல் காணப் படும் உத்திரவு 4-12 2014ல் தான் வழங்கப் பட்டது.

<u>மேற்படி உத்திரவில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.</u>

1) 9 1 2014 வேலைபளு ஒப்பந்தம் மற்றும் அதனைத் தொடர்ந்து வெளியிட்ட 11 1 2014 தேதியிட்ட வாரிய உத்திரவில், அனைத்து இயக்குதல் மற்றும் பராமரிப்பு

பிரிவுகளுக்கும் மற்றும் கட்டுமான உபகோட்டங்களுக்கும், சிறப்பு நிலை ஆக்க முகவர் பொறுப்புக்கள் அனுமதிக்கப் பட்டுள்ளது.

2) மேற்கண்ட சிறப்புநிலை ஆக்கமுகவர் பொறுப்புகளில் பதவி உயர்வு வாய்ப்பினை பெற்றிடும் பொருட்டு, ஏற்கனவே துறக்கப் பட்ட பதவி உயர்வினை, ரத்து செய்திட வேண்டும் என்று தொழிலாளர்களும், சங்கங்களும் முறையிட்டுள்ளார்கள்.

3) மேற்கண்ட பிரச்சனை ஆழ்ந்து பரிசீலிக்கப் பட்டு, ஏற்கனவே பதவி உயர்வை துறந்தவர்களுக்கு, 3 ஆண்டு முடிவதற்குள் ரத்து செய்திட, ஒரு சிறப்பு நேர்வாக அனுமதிக்கப் படுகிறது.

7) எங்களது வேண்டுகோள் நாளான 6-9-2014 க்கும் உத்திரவு வழங்கப்பட்ட நாளான 4 12 2014க்கும், இடைப் பட்ட காலத்தில், வட்டங்களில் 9 1 2014 வேலைபளு ஒப்பந்தத்தினால் வழங்கப் பட்ட கூடுதல் சிறப்புநிலை ஆக்கமுகவர் பொறுப்புகளுக்கு நேராக, பதவி உயர்வு வழங்கும் பட்டியல் தயாரிக்கப் பட்டு, நிலுவையில் உள்ள பட்டியலில் 4 12 2014ல் வழங்கப் பட்ட சிறப்பு சலுகையின் அடிப்படையில் ஏற்கனவே பதவி உயர்வை துறந்தவர்களின் பெயர்கள் சேர்க்கப் பட்டதற்கு ஆட்சேபனை எழுப்புவதாக அறிகிறோம்.

8) தொழிலாளர் நலன், தொழில் அமைதி மற்றும் தொழில் உறவு ஆகியவைகளை மனதில் கொண்டு துணை சட்ட அந்தஸ்து கொண்ட மின்வாரிய பணிவிதிகளுக்கே வாரியம் விதிவிலக்கு கொடுத்து, ஒரு சிறப்புச் சலுகை வழங்குவதன் நோக்கமே, வாரியமும், தொழிற்சங்கங்களும் சேர்ந்து, ஒரு நல்லிணக்கத்துடன் ஏற்படுத்திய, வேலைபளு ஒப்பந்தத்தினால் பெறுகின்ற கூடுதல் சிறப்புநிலை ஆக்க முகவர் பொறுப்புக்களில், பதவி உயர்வு பெறும் பலனை ஏற்கனவே பதவி உயர்வு துறந்தவர்கள் பெற்றிடவேண்டும் என்பதுதான். இதனை யாரும் மறுத்திட முடியாது.

9) வேலைபளு பொறுப்புக்களுக்கு எதிராக தயாரிக்கப் பட்ட பதவி உயர்வு பட்டியலில் இவர்களது பெயர் சேர்க்க முடியாதென்றால் வாரியம் வழங்கிய சிறப்புச் சலுகை செயலற்றதாகிவிடும். பிறப்பிக்கப் பட்ட நாளிலிருந்துதான் உத்திரவு அமுலாகும் என்கின்ற நடைமுறை மற்றும் பதவி உயர்வுப் பட்டியலின் மத்தியில் பெயர் சேர்க்கக் கூடாது என்ற நடைமுறையெல்லாம் இத்தகைய சிறப்புச் சலுகைகளுக்கு பொருந்தாது.

10) மேற்கூறியவைகளை பரிசீலித்து, வேலைபளு கூடுதல் பொறுப்புக்கு எதிராக தயாரிக்கப் பட்ட பட்டியலில், ஏற்கனவே பதவி உயர்வை துறந்திட்ட சிறப்பு நிலை ஆக்கமுகவர்களின் பெயரை சேர்த்து, வாரிய உத்திரவின் பலன், தொழிலாளர்களுக்கு கிடைத்திட ஆவண செய்திடுமாறு வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

நகல் : பொதுச்செயலாளர் / தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம்.
பொதுச்செயலாளர் / தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம்.
தலைவர் மற்றும் மத்திய சங்கப் பொறுப்பாளர்கள் / மண்டலச்செயலாளர்கள்.

----